மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை ராசாசி மருத்துவமனையில் 6 சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ததாகச் சொன்னார்கள். இந்த 6-ல் வெற்றி கண்டது எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? தொடர்ந்து இன்னும் அதிகமாக செய்வதற்கு வேண்டிய கருவிகள், நிபுணர்கள் ராசாசி மருத்துவமனையில் நியமிக்கின்ற திட்டம் அரசிடத்தில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 31—1—1990 அன்று தமிழக அரசின் காவல் துறையைச் சேர்ந்த திரு. இராசையா என்பவருக்கு மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் வெற்றி பெற்று இருக்கின்றன. அங்கே இந்தத் துறையில் ஒரு பேராசிரியர், ஒரு கூடுதல் பேராசிரியர், ஒரு ஆசிரியர், ஒரு செவிலியர் இந்த துறைக்கு ஒதுக்கி பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நான் முந்தைய கேள்விக்கு பதில் சொன்னது போல் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப இதை விரிவுபடுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

நொய்யல் ஆற்றைச் சுத்தப்படுத்துதல்.

*8871. திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர மையத்துல உள்ள நொய்யல் ஆற்றை சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உளளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம்.என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை. ஆனால் திருப்பூர் நகரில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறை ஆலைகள் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்யாமல் நொய்யல் ஆற்றில் விடுவதைத் தடுக்க ஒரு பொதுவான கழிவுநீர்ச். சுத்திகரிப்பு நிலையம் (Common Effluent Treatment Plant) அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் மத்தியில் இருக்கிற நொய்யல் ஆற்றின் இரு புறங்களில் இருக்கக்கூடிய சாக்கடை நீர் முழுவதும் அந்த நொய்யல் ஆற்றில் தேங்கி நின்று அங்கே மிகக் கடுமையாக துர்நாற்றம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் ஆண்டுக்கு 2, 3 முறை நொய்யல் ஆற்றில் தண்ணீர் வந்த காரணத்தால் அவைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டு இருந்தது. தற்போது அந்த வாய்ப்பு பல ஆண்டுகளாக இல்லாத நிலையில் மிக மோசமான நிலையில் இருக்கிறது. எனவே அதை சுத்தம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

(9-45 மணி)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலை களிலேயிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வடிகால்கள் மூலமாக நொய்யலாற்றில் கலக்கிறது. எனவே, இத்தொழிற்சாலைகளுக்கென ஒரு பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் முயற்சிக்கு சாயத் தொழில் உரிமையாளர்கள் ஆதரவு அளிக்க சம்மதித்து உள்ளனர். பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து ஆராய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒரு குழுவை அமைத்து உள்ளது. அந்தக் குழுவில், வாரிய அதிகாரிகள், நகர் மற்றும் கிராம அமைப்புத் துறை, உள் ளாட்சி நிறுவனங்கள் மற்றும் வருவாய்த் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழு திருப்பூர் பகுதியில் உள்ள சலவை மற்றும் சாயப் பட்டறைத் தொழிற்சாலைகளின் தற்போதைய நிலையையும் அவற்றில் எந்தெந்த தொழிற்சாலைகளை பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்பதையும், எந்தெந்த தொழிற்சாலைகள் தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்

என்பதையும் கண்டறிந்து, இப்போது அறிக்கை தயாரிக்கின்ற பணியைச் செய்து வருகிறது. அந்தப் பணி விரைவுபடுத்தப் படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதற்கு நன்றி. நான் கேட்டது, சாக்கடை தண்ணீர் தொடர்ந்து அங்கே வந்து தேங்கி நிற்கிறது. அதன் விளைவாக, பன்றிகளின் இருப்பிடமாக அது மாறிக் கொண்டிருக்கிற காரணத்தினால் பல தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த மாதம் குடிநீர் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக கோவைக்கு வருவதாக ஏற்கெனவே தெரிவித்து இருப்பதாலும். அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, அந்த நொய்யலாற்றிலே தேங்கி நிற்கக்கூடிய, அந்தச் சாக்கடைத் தண்ணீர் தேங்கி நிற்கிற இடங்களையெல்லாம் பார்வையிட்ட பிறகாவது, அந்த நகர மக்களின் சுகாதாரம் கருதி, அவர்கள் துறையின் மூலமாக மேல் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எங்கள் துறையினுடைய பணி அல்ல. அந்த நகராட்சியே செய்யவேண்டிய பணி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நகராட்சியோடு பேசி, அந்தப் பணியைச் செய்ய லாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நூற்பு ஆலை திறத்தல்.

*984. **திரு. ஆலவயல் சுப்பையா :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, நமனசமுத்திரம் நூற்பு ஆலையை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அந்த ஆலை எப்பொழுது திறக்கப்படும் ?